## 22

# வியப்பெதுவும் இல்லை!

## [6:1-8]

இது உங்கள் பிறந்த நாளாக உள்ளது, எவரொருவரும் உங்களை நினைவுகூறவில்லை என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். நீங்கள் கதவருகில் வருகின்றீர்கள், யாரோ ஒருவர், "வியப்பு!" என்று உரக்கக் கூறுகின்றார், திடீரென்று, உங்கள் நண்பர்கள் தங்கள் முகங்களில் பெரிய புன்னகை களுடன் உங்களைச் சுற்றிக் கூட்டம்கூடுகின்றனர். அது பலருக்குப் பெரியதொரு மகிழ்பொங்கும் வியப்பாயிருக்கும்.[1]

சில வியப்புக்கள் அவ்வளவு மகிழ்ச்சி நிறைந்தவையாய் இருப்ப தில்லை. நீங்கள் ஒரு புதிய வண்டியை வாங்கிச் சிலவாரங்களில் அது ஓடாது நின்று விடுகிறது. அந்த வண்டியைச் சரிபார்ப்பதற்கு சில ஆயிரம் ரூபாய்கள் செலவாகும் என்று பழுதுநீக்கும் ஒருவர் கூறுகின்றார். நீங்கள் அந்த வண்டியை வாங்கிய நிறுவனத்திற்குக் கையில் உத்தரவாத அட்டையுடன் செல்லுகின்றீர்கள். அங்குள்ளவர் புன்னகையுடன் அந்தப் பதிவேட்டில் உள்ள சிற்றெழுத்தில் அச்சிடப்பட்ட குறிப்பைச் சுட்டிக்காண்பிக்கின்றார்: அந்தக் குறிப்பிட்ட பிரச்சனை உத்தரவாதத்திற்குள் வருவதில்லை. வியப்பு!/திகைப்பு!

உங்களுக்கு உடல்நிலை சரியில்லை. அதைத் தீவிரமானதாக நீங்கள் நினைக்கவில்லை - நீங்கள் மிக விரைவில் களைப்படைந்து போகின்றீர்கள், அவ்வளவே. இருப்பினும், மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். மருத்துவர் உங்களைப் பலவகையில் பரிசோதனை செய்து பின்பு ஆய்வறைக்குத் தமது முகத்தில் கவலையான பார்வையுடன் வருகின்றார். "உங்களுக்கு இரத்தப் புற்றுநோய் உள்ளது, எங்களால் உங்களுக்கு உதவக்கூடும் அல்லது கூடாதுபோகும்" என்று கூறுகின்றார். வியப்பு!/திகைப்பு!

அவ்வப்போது ஏற்படுகிற வியப்பு/திகைப்பு என்பது வாழ்வை வெறும் மந்தமாக இருப்பதில் இருந்து பாதுகாக்கிறது, ஆனால் அன்றாட நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், நம்மில் பெரும்பான்மையான வர்கள் எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதை அறிய விரும்புகின்றோம். பொதுவாகப் பேசுவதென்றால், வாழ்வு என்பது "வியப்பு/திகைப்பு எதுவும் அற்றதாக" இருக்க விரும்புகின்றோம்.

கிறிஸ்தவர்கள் "வியப்பெதுவும் இல்லாத" வாழ்வை - விசேஷமாக, உபத்திரவம் பற்றிய வியப்பெதுவும் இல்லாத வாழ்வை - கொண்டிருப்பது முக்கியம் என்று கர்த்தர் நினைத்தார். அவர் தமது சீஷர்கள் எதிர்கொள்ள விருந்த உபத்திரவம் பற்றித் திகைப்புக்குரிய வகையில் கபடமின்றிப்

பேசினார்:

> *சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும், மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள், பெற்றோருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலைசெய்வார்கள். என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் … (மத்தேயு 10:21, 22).*
>
> *பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள், சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன் (மத்தேயு 10:34).*[2]

பவுலும் இவ்வாறே நினைத்தார். புதிய கிறிஸ்தவர்களுக்கு அவர், "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று" கூறினார் (நடபடிகள் 14:22ஆ). மேலும் அவர், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று எழுதினார் (2 தீமோத்தேயு 3:12). பேதுரு, "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" என்று எழுதக்கூடுமளவுக்கு (1 பேதுரு 4:12), இயேசுவைப் பின்பற்றுபவர் களுக்கு ஏற்படும் உபத்திரவம் பற்றி வேதாகமம் மிகவும் அதிகமாய்க் கூறுகிறது.

நமது முந்திய பாடத்தில், வரப்போகிற "அக்கினியாய்ப் பற்றியெரியும் கொடுமைகள்" பற்றி முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு "வியப்பு எதுவும் இருக்கக் கூடாது" என்பது, தீமையென்று கருதப்படும் நான்கு குதிரைகள் பற்றிய தரிசனத்துடன் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் பொருளுரை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுள்ள காரணங்களில் ஒன்றாக இருந்தது என்று நான் சுட்டிக்காண்பித்தேன். இயேசுவுக்கு நமது வாழ்வை ஒப்புவிக்கும்போது அதில் அடங்கியுள்ளது என்ன என்பதை நாம் இன்னும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. நான்கு குதிரை வீரர்களைப் பற்றிய நமது படிப்பை, இன்றைய நாட்களின் அறைகூவல்களுக்கு விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டுடன் நாம் தொடருவோம். ("நான்கு குதிரை வீரர்கள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

## குதிரை வீரர்கள் தொடர்ந்து சவாரி செய்கின்றனரா?

அச்சுறுத்தும் அந்தக் குதிரை வீரர்கள், முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டில் வெறுமனே சவாரி செய்திருக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உலகத்தில் பாவம் பிரவேசித்தபோதே, இந்த நால்வரும் தங்கள் ஓட்டத்தைத் தொடங்கியிருந்தனர் (ஆதியாகமம் 3), மற்றும் அவர்கள் காலங்கள் தோறும் மனிதகுலத்தைத் தொடர்ந்து வதைத்து

வந்தார்கள். வெளிப்படுத்தின விசேஷம் 6:1-8 வசனப்பகுதியானது "துன்புறுதல் வலம்வரும் காட்சியின் வரலாற்று நிகழ்ச்சி" என்று அழைக்கப் பட்டுள்ளது. ஜான் பௌமன் அவர்கள், முதல் நான்கு காட்சிகளும், "ஒரு வருத்தம் தோய்ந்த வரலாற்றைக் கூறுகின்றன. இது மனிதனின் சலிப்பு மற்றும் அவனது உழைப்புகளின் வீணானதன்மை பற்றிய கவலைக்குரிய வரலாறாக உள்ளது; இது கலாச்சாரங்கள் மற்றும் நாகரீகங்கள் ஆகியவற்றின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி ஆகியவற்றின் சுழல் முழக்கமாக உள்ளது" என்று கூறினார்.[3] யூஜீன் பீட்டர்ஸன் அவர்கள், இந்தக் குதிரைவீரர்கள், மனிதனுக்கு மனிதன் காண்பித்த மனிதத்தன்மையற்ற குணத்திலிருந்து விளைந்த தீமையின் மாதிரியாக உள்ளது என்று அறிவித்தார்:

> யுத்தம் என்பது சமுதாயத் தீமையாக உள்ளது; பஞ்சம் என்பது உயிர்ச்சூழல் தீமையாக உள்ளது; வியாதி என்பது உயிரியல் தீமையாக உள்ளது. யுத்தமானது சமுதாயத்தின் நற்தன்மையைத் தாக்குகிறது; பஞ்சமானது தேவனுடைய தாராளத்தன்மையை மீறி அழிக்கிறது; வியாதியானது தேவன் கொடுத்த உடல்களை அழித்து வீணாக்குகிறது: இது சமுதாயத்திற்கு எதிரான பாவங்கள், நாட்டிற்கு எதிரான பாவங்கள், உடலுக்கு எதிரான பாவங்கள்.[4]

ஒரு மறுப்பை நான் கேட்க முடிகிறது: "நிச்சயமாகவே இந்த நான்கு வீரர்களும் தங்கள் குதிரைகளை கடந்தகாலத்தின் சிலவேளைகளில் லாயங்களில் இட்டுவிட்டனர். அவர்கள் ஒளியூட்டப்பட்ட நமது காலங்களில் இன்னமும் சவாரி செய்துகொண்டிருப்பதில்லை, அல்லவா?" பின்வரும் எதிரொலிக்கும் பதிலுக்கு ஆதாரம் வேண்டப்படுவது குறித்து நான் அஞ்சுகின்றேன்: "ஆம், அவர்கள் இன்னமும் சவாரி செய்கின்றனர்!" நமது முந்திய பாடத்தில் நாம், புரூஸ் மெட்ஸ்ஜெர் அவர்களின் பின்வரும் விளக்கத்தைக் குறிப்பிட்டோம்: "புத்தகங்கள், செய்தித்தாள்கள், பத்திரிகைக் கட்டுரைகள் மற்றும் வானொலி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் நாம், இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்களும் இன்றைய நாட்களில் உலகில் பவனிவருவது பற்றி வாசிக்கின்றோம் மற்றும் கேட்கின்றோம்."[5] பர்ட்டன் காஃப்மன் அவர்கள் இதை ஒப்புக்கொண்டார்: "ஒவ்வொரு காலைவேளைச் செய்தித்தாளும் அழிக்கும் இந்தக் குதிரை வீரர்கள் ... இப்போது உலகம் முழுவதிலும் என்ன செய்கின்றனர் என்பது பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளன."[6]

இந்த நான்கு குதிரை வீரர்களும் எப்போதும் பூமியின்மீது சவாரி செய்து கொண்டு இருந்துள்ளனர், இருப்பார்கள் என்பதற்கு நிரூபணம் தேவைப்படுகிறது என்றால், பின்வருவனவற்றை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்:

### வெள்ளைக் குதிரையின்மீது ஏறியிருந்தவர்

மற்றவர்கள்மீது தங்கள் சித்தத்தைத் திணிக்க விரும்பும் எந்த ஒரு தனிநபரும் அல்லது மக்கள் குழுவும் இந்த முதல் சவாரியாளராக இருக்கின்றார் என்று நான் கருத்துத் தெரிவிக்கின்றேன்.[7] காயீன் தொடங்கி,

மக்கள் மற்றவர்களுக்கு உரியவற்றைக் கவர்ந்து கொண்டுள்ளனர் - மற்றும் அவற்றைப் பெறுவதற்கு எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் சென்றுள்ளனர்.[8]

> கோடீஸ்வரர் ஒருவரிடத்தில் ஒரு பிச்சைக்காரர்,
> “உங்களை உண்மையிலேயே மகிழ்ச்சியுள்ளவர் ஆக்குவதற்கு
> இன்னும் எவ்வளவு ரூபாய்கள் தேவைப்படும்?” என்று கேட்டார்.
>
> கோடீஸ்வரர் தமது கரளை வாய்ந்த கைகளை
> அந்தப் பிச்சைக்காரரின் பாத்திரத்தில் இட்டு, எடுத்துக் கொண்டு
> “ஒரே ஒரு ரூபாய் தான்!” என்று பதில் அளித்தார்.[9]

அபகரித்துப் பிடிக்கும் நில உரிமையாளர், “உலகத்தில் உள்ள எல்லா நிலத்தையும் நான் விரும்பவில்லை; என்னுடைய நிலத்திற்கு அருகில் உள்ள நிலத்தை மாத்திரமே நான் விரும்புகின்றேன்” என்று கூறுகின்றார்.

வெள்ளைக் குதிரையின்மீது ஏறியிருந்தவர் உறவுமுறையின் ஒவ்வொரு மட்டத்தின்மீதும் செயல்படுகிறார்: தனிப்பட்ட, நாடளாவிய, மற்றும் உலகளாவிய மட்டங்கள். இவரை நீங்கள் “வெற்றி கொண்டவர்,” “ஏகாதிபத்தியம்,” “பேராசை,” அல்லது “சுயநலமாக ஓடும் கலகக்காரர்” என்று எப்படிப் பெயரிட்டாலும், இவர் நமது உலகத்தில் தொடர்ந்து பாய்ந்தோடுகின்றார் - மற்றும் பேரழிவு எவ்வித மாற்றமும் இன்றி இவரைத் தொடருகிறது.

**சிவப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவர்**

பாவத்தினால் வியாதிப்பட்டுள்ள இந்த உலகம் எப்போதுமே, “யுத்தங்களையும் யுத்தங்களின் வதந்திகளையும்” கொண்டுள்ளது. ஆல்பர்ட் ஐன்ஸ்டின் என்பவர் பின்வரும் கவலைக்குரிய கவனக்குறிப்பை ஏற்படுத்தினார்: “அரசு மாட்சிமையுடைய நாடுகள் மகா சக்தியைக் கொண்டிருக்கும் வரையிலும் போர் என்பது தவிர்க்க இயலாததாக இருக்கும்.”[10] யுத்தத்தை மகிமைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன, ஆனால் 1880ல் ஜெனரல் வில்லியம் டெக்கும்ஸேஹ் ஷெர்மேன் என்பவரால் கூறப்பட்ட வார்த்தைகள் இன்னமும் உண்மையானதாகவே ஒலிக்கின்றன: “நான் யுத்தத்தினால் களைப்படைந்து வியாதியுற்றவன் ஆனேன் ... ஒருக்காலும் குண்டடி படாதவர்களும், யுத்தமுழக்கத்தையும் காயமடைந்தவர்களின் கூக்குரல்களையும் கேட்காதவர்களும் தான் இரத்தத்திற்காக, அதிகம் பழி வாங்குதலுக்காக, அதிகம் கைவிடப்படுதலுக்காக உரத்துக் கூவுகின்றனர்.”[11] ஷெர்மேனின் இந்தக் கூற்றுக்குத் தூண்டுதலாய் இருந்த யுத்தங்கள் நடந்த இடங்களில் நான் நடந்திருக்கின்றேன். விழுந்துபோன யுத்தவீரர்களின் கல்லறைகள் தொடுவானம் வரைக்கும் நீண்டுள்ள புதையிடங்களை நான் பார்த்திருக்கின்றேன். யுத்தத்தினால் சிதைக்கப்பட்ட உடல்கள், மனங்கள் மற்றும் வாழ்வுகள் என்ற அதன் கண்டிப்பான வழிமுறை உடைமைகளை நான் கண்டிருக்கின்றேன். எஞ்சியிருப்பவர்களின் உணர்வற்றுப்

போகச்செய்யும் துக்கத்தை நான் பகிர்ந்து கொண்டிருக்கின்றேன். இந்த இரண்டாம் குதிரை வீரர் இன்னமும் நம் மத்தியில் சவாரி செய்து கொண்டிருக்கின்றுர் - இவர் ஒரு நாளுக்காவது தனது குதிரையை இலாயத்தில் இடுவதற்கு மறுக்கின்றார்.

### கறுப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவர்

இவர்களில் எந்த ஒரு குதிரை வீரராவது நீண்டகாலத்திற்கு முன்பே ஓய்வு பெற்றிருக்க வேண்டுமென்றால், அது கறுப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவராகத்தான் இருக்க வேண்டும்: பொருளாதார கஷ்டம். விவசாயத் தொழில் நுட்பமானது தொடர்ந்து மேம்பட்டுக்கொண்டுள்ளது; ஒரு மனிதரால் ஆயிரம் பேர்களுக்கு உணவளிக்கத் தேவையானவற்றை வளர்க்க முடிகிறது.[12] இருந்தபோதிலும், உலக மக்கள் தொகையில் 70 சதவிகிதம்பேர் இன்றிரவு பசியுடன் படுக்கச் செல்லுவார்கள் என்பது இன்னமும் உண்மையாக உள்ளது. நான் எனது கண்களை மூடிக்கொள்ளும்போது, பெருந்துன்பத்திற்குள்ளான ஆண்களும் பெண்களும் தங்களின் பசிக்கொடுமையைத் தீர்ப்பதற்கு ஒருசில உணவுத் துணுக்குகளுக்காகக் குப்பைக்குவியலில் ஆழமாய்த் தேடும் - அல்லது தீக்குச்சிபோன்ற கைகால்களையும் ஊதிய வயிறுகளையும் கொண்ட பட்டினியாய் இருக்கும் குழந்தைகளின் - தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காணமுடிகிறது.

### மங்கின நிறமுள்ள குதிரையின்மீது ஏறியிருந்தவர்

நான்காவது சவாரியாளர் மற்றும் அவரது துணைவர் பற்றிய விஷயம் என்ன? மரணமும் பாதாளமும், “பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும் ... கொலைசெய்யும்” (6:8) செயலை தொடர்ந்து கொண்டிருக்கின்றனவா?

பட்டயம் ஒருக்காலும் உறையில் இடப்படவில்லை என்பது தெளிவு. கடந்த மற்றும் நிகழ்காலத்தில் இதற்கு ஏராளமான உதாரணங்கள் உள்ளன: அறுபது இலட்சம் யூதர்கள் கொலைவெறியுடன் கொடூரமாக கொல்லப்பட்டனர்; ஹிரோஷிமாவில் அணுப்புயல்களினால் பல ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் சிறுமிகளும் புகைந்து போயினர்; யுத்தத்தினால் சீரழிக்கப்பட்ட நகர்களில் இன்றைய நாட்களிலும்கூட அலங்கோலமான உடல்கள் சிதறிக்கிடக்கின்றன.[13] இல்லத்திற்கு நெருங்கி வருகையில், தங்கள் உயிரினும் அன்பாக நேசித்த ஒருநபரை இதுவரையிலும் யாராவது அடக்கம் செய்யாது இருந்துள்ளோமா?

சாவுக்கேதுவான இந்த இரட்டையர்களால் பஞ்சம் என்பது தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. யுத்தத்தினால் தூண்டப்பட்ட பஞ்சம், 1943ல் சீனாவில் ஐம்பது இலட்சம் மரணங்களையும், 1970ன் பிற்பகுதிகளில் கம்போடியாவில் எடுத்துரைக்க இயலாத துன்பங்களையும் விளைவித்தது. வறட்சியால் தூண்டப்பட்ட பஞ்சமானது இந்தக் கணத்தில் கூட ஏராளமானவர்களைக் கொன்றுள்ளது.

கொள்ளைநோய் என்பது மரணத்தின் கோட்டையில் எப்போதுமே பேரழிவின் ஆயுதமாக இருந்துள்ளது. பிளேக் எனப்படும் கறுப்பு மரணம்

*(பியூபோனிக் வியாதி) என்பது மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் ஆசியா கண்டங்களில், ஆறாம் நூற்றாண்டில் பத்துக்கோடிப் பேர்களையும், ஐரோப்பா கண்டத்தில், பதினான்காம் நூற்றாண்டில் ஏழரைக் கோடிப் பேர்களையும் கொன்றது. 1918-19ல் ஏற்பட்ட விஷக்காய்ச்சல் பேரழிவானது எனது குடும்பத்தைத் தாக்கிற்று; இறந்துபோன இரண்டுகோடிப் பேர்களில் எனது தந்தையின் தாயும் ஒருவராயிருந்தார் (அந்த வேளையில் எனது தந்தை நான்கு வயதுடையவராய் இருந்தார்). எய்ட்ஸ் என்ற கொள்ளை நோயானது இன்றைய நாட்களில் இன்னமும் மிகவும் மரணத்திற்குரிய பெரு நோயாக நிரூபிக்கப்பட்டுள்ளது.*

*"பூமியின் துஷ்ட மிருகங்கள்" பற்றிய விஷயம் என்ன? உலகத்தில் நான் வாழும் பகுதியில், பெரும்பாலான துஷ்டமிருகங்கள் மிருகக் காட்சி சாலையில்தான் உள்ளன. மரணம் என்ற அரக்கன், "துஷ்ட மிருகங்களில்" ஒருசிலவற்றையே தனக்குக் கீழ் கொண்டுள்ளானா? அல்லது விலங்குகளின் அரசில் உள்ள மிருகங்கள் வெறுமனே, மிகவும் சாவுக்கேதுவான "காட்டு மிருகங்களால்" - அதாவது ரோமாபுரி, பெய்ரூட் மற்றும் பெல்ஃபாஸ்ட் ஆகிய இடங்களின் வன்முறையாளர்களாக - மாத்திரம் மாற்றப்பட்டுள் ளனவா?; ஆக்லஹாமா நகரில் உள்ள குடியரசுக் கட்டிடத்தை இடித்து அழித்த பிறழ்வுநிலை கொண்ட மனிதர்கள்; அர்க்கன்சாஸின் வொய்ட் மாகாணத்தின் "நீல விளக்குக் கற்பழிப்பாளர்"?[14]*

*நான்காவது குதிரை வீரர் தொடர்ந்து சவாரி செய்துகொண்டுள்ளார் என்று நான் கூறும்போது எவரொருவரும் நிச்சயமாக விவாதம் செய்ய மாட்டார். அவரை எவரொருவரும் தவிர்க்கவும் முடியாது. முதல் மூன்று குதிரை வீரர்களின் பாதையில் இருந்து நீங்கள் விலகியிருந்தாலும், மங்கின நிறமுள்ள குதிரையின்மீது ஏறியிருப்பவரிடமிருந்து நீங்கள் தப்ப இயலாது. அவரது வேலை அட்டவணைப் புத்தகம் உங்கள் பெயரைக் கொண்டுள்ளது (எபிரெயர் 9:27).*

*இந்த நான்கு குதிரை வீரர்களும் இன்னமும் சவாரி செய்து கொண்டிருக்கின்றனர் என்று உங்களை நான் நம்பச் செய்துள்ளேனா? இவர்கள் "காலம் கடந்த ஆவியுருவங்களாக" உள்ளனர் என்று ஏர்ல் பால்மர் அவர்கள் முடிவுசெய்தார், மற்றும் இவர்கள் இயங்குகிற வழிமுறை மாத்திரமே மாறியுள்ளது:*

> *முதல் நூற்றாண்டில் தன்னால் பாதிக்கப்படுபவரை வேட்டையாடி வீழ்த்திய வில்வீரர், இந்த நூற்றாண்டில், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைப் பயன்படுத்துகின்றார். யுத்த இரதங்களில் சவாரி செய்தவர்கள் இருபத்தியோராம் நூற்றாண்டாகிய இந்தக் கடைசி நாட்களில், மிகு வேக டாங்கிகள், ஹெலிகாப்டர்கள், மற்றும் நகரத்தெருக்களில் திடீரென்று தாக்கிக் கொலைசெய்யும் வன்முறை யாளர்கள் மூலம் அழிவு ஏற்படுத்துகின்றனர். பஞ்சமும் மரணமும் மாத்திரமே ஒரேவிதமாக நிலைத்துள்ளன. [விவசாயம் சார்ந்த] முதல் நூற்றாண்டில் பட்டினியாய் இருந்த குழந்தையொன்று, தொழில் நுட்பம் சார்ந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் பட்டினியாய் இருக்கும் குழந்தையைப் போன்றே காணப்படுகிறது.[15]*

# இவர்கள் சவாரி செய்வதைத் தேவன் ஏன் அனுமதிக்கின்றார்?

இந்த நான்கு குதிரை வீரர்களும் இன்றைய நாட்களிலும் சவாரி செய்கின்றனர் என்பதை நாம் ஒப்புக்கொண்டால் - யோவானின் நாட்களிலும் நிச்சயமாகவே எழும்பியிருக்கக் கூடிய - ஒரு கேள்வி எழும்புகிறது: "ஏன்?" தேவன் எந்த ஒரு விஷயத்தையும் நோக்கமின்றி செய்வதில்லை. நான்கு குதிரை வீரர்கள் பற்றிய தரிசனத்தில் தேவன் எந்த செய்தியை அறிவிக்க முயற்சி செய்துகொண்டிருந்தார்? நமது முந்திய பாடத்தில் நாம், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் நிலைப்பாட்டில் இருந்து வந்த இதே போன்ற கேள்வியோடு போராடினோம். இப்போது நாம், நமது சொந்தக் கண்ணோக்கக் கருத்தில் இருந்து இதனுடன் போராடுவோம்.[16]

**எதிர்காலம் துன்பத்தினால் நிறைந்திருக்கும்**

இந்த உலகத்தைப் பொறுத்த மட்டில், எதிர்காலம் என்பது எப்போதுமே துன்பத்தினால் நிறைந்து இருக்கும் என்பது நாம் அறியும்படி தேவன் விரும்புகிற ஒரு சத்தியமாக உள்ளது. டாமி சவுத் அவர்கள் "மக்களில் சிலர் எப்போதுமே ஒரு கற்பனை உலகத்தை, 'பூமியில் பரலோகத்தை,' சமாதானம் மற்றும் அமைதி நிலையின் 'பொற்காலம் ஒன்றை' எதிர்பார்க்கின்றனர். இது ஒருக்காலும் நடைபெறாது என்று முதல் நான்கு முத்திரைகளும் வலிவார்ந்த முறையில் அறிவிக்கின்றன. பரலோகம் பரலோகத்தில்தான் இருக்கும், அதற்கு ஒரு நிமிடம்கூட முன்னதாக அது இங்கிராது."[17]

நம்மைச் சுற்றிலும் உள்ள இடர்ப்பாடுகள், நாம் பாவம் நிறைந்த உலகத்தில் வாழ்கின்றோம் என்பதற்கு ஆதாரமாக உள்ளன. முதல் பாவ மானது முள்ளுகள், குருக்குகள், வியர்வை மற்றும் துன்புறுதல் ஆகியவற்றின் சாபத்தைக் கொண்டு வந்தது (ஆதியாகமம் 3:16-19). மனிதன், பாவம் நிறைந்த தன்மையில் நிலைத்திருத்தல் என்பது பூமியைத் தொடர்ந்து சீர்குலையச் செய்துள்ளது. மெட்ஸெஜெர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> பஞ்சம், மரணம் மற்றும் நரகம் ஆகியவற்றைத் தேவன் அங்கீகரிப் பதில்லை, ஆனால் அவைகள், தேவனுடைய சட்டத்தை மக்கள் எதிர்த்து நிற்பதில் நிலைத்திருந்தால் ... ஒரு மலைக்குன்றின்மீதிருந்து குதிப்பது போன்ற இயல்பான விதிகளைப் புறக்கணித்தால், தொடர வேண்டியவைகளாக உள்ளன. ஒழுக்க விதிகளைப் புறக்கணித்தால் பேரழிவு ஏற்படுதல் உறுதியானதாக உள்ளது ... தேவன் சாபங்களை விரும்புகின்றவர் அல்ல, ஆனால் நாம் சுயாதீனமுள்ள முகவர்களாக இருக்கும் வரைக்கும் அவற்றைத் தேவன் அனுமதிக்கின்றார்.[18]

**உண்மையுள்ளவர்கள் சோதனைகளை எதிர்கொள்ளுவார்கள்**

நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தாலும், அப்போதும் நாம் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று நாம்

புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தேவன் விரும்புகின்றார். இன்றைய நாட்களின் ‘‘சுகவாழ்வு - மற்றும் - செல்வம்’’ பற்றிய தீர்க்கதரிசிகள், உண்மையாகவே விசுவாசம் நிறைந்தவர்கள் வாழ்வின் சிரமங்களில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளனர் என்று வலியுறுத்துகின்றனர். அவர்களின் சீஷர்களுக்கு[19] பரிபூரண ஆரோக்கியமும் நிதிநிலைப் பாதுகாப்பும் வாக்குத்தத்தம் செய்யப்படுகின்றன. சோதனைகளைப் பொறுத்தமட்டில், “துன்புறுதல் இல்லை” என்பது அவர்களின் செய்தியாக உள்ளது, ஆனால் ‘‘வியப்பெதுவும் இல்லை’’ என்பதே இயேசுவின் செய்தியாக உள்ளது. “அநேகரை வஞ்சிக்கும் கள்ளத் தீர்க்கதரிசிகள்’’ எழும்புவார்கள் என்பது பற்றி இயேசு பேசினார் (மத்தேயு 24:11). யோவான், ‘‘உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால்” என்று கூறினார் (1 யோவான் 4:1அ). உண்மை நிறைந்தவர்கள் சோதனைகளைக் கொண்டிருக்க மாட்டார்கள்[20] என்று உரிமைகோருகின்றவர்கள் இயேசுவும் யோவானும் சத்தியத்தைப் பேசினர் என்பதற்கு நிரூபணமாக உள்ளனர்.

> கிறிஸ்தவர்கள், ஆவிக்குரிய தண்ணீர்க் கல்லறையான ஞானஸ்நானத்தில் இருந்து மேலே வெளிவரும்போது, அவர்கள் இயல்பான சமாதானமும் செல்வமும் உள்ள பூரணப்பட்ட உலகத்தினுள் வருவதில்லை என்பதே சத்தியமாக உள்ளது. இயல்பான/உயிர்வாழும் ஜீவிகள் என்ற வகையில் நாம், மனிதகுலத்தின் எஞ்சிய பகுதியினர் எதிர்கொள்ள வேண்டிய அன்றாட காயங்கள், அச்சுறுத்தும் உலக நிகழ்ச்சிகள், வியாதிகள், மற்றும் மரணம் ஆகியவற்றை எதிர்கொண்டாக வேண்டும். ... [21]

முந்திய பாடத்தில் நான், ‘‘கலகம், சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் என்பவை எல்லா மனிதர்களுக்கும் உரிய பங்குகளாய் இருக்கின்றன, ஆனால் *கிறிஸ்தவர்கள்* இரண்டு மடங்கைப் பெறுகின்றனர் என்று கூறினேன்: இயேசுவைப் பின்பற்றுபவர்கள் வாழ்வின் சாதாரண கேடுபாடுகளுக்கு ஆளாவதுடன், அவர்கள் தங்கள் விசுவாசத்திற்காகத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டும் அடிக்கடி துன்புறுத்தப்படுகின்றனர்.” இந்த சத்தியத்தை அறிவதற்கு நாம் ஏற்கனவே தயாராக இல்லையென்றால், நாம் அவ்வாறு தயாராக வேண்டியது அவசியமாக உள்ளது.

நெருக்கடியில் மிதித்துத்தள்ளும் குதிரைகள் மற்றும் அவைகள் ஏற்படுத்தும் பீதி ஆகியவற்றின் கருத்தை எவ்வாறு கொடுப்பது என்று நான் போராடினேன். நெருக்கடியில் மிதித்துத்தள்ளப்படுதலை கண்டிருக்கலாம், வெகு சிலரே அதில் அகப்பட்டுக் கொண்டிருக்கலாம். நான் பல குதிரைகளைக் கண்டுள்ளேன், ஒருசிலவற்றின்மீது சவாரி செய்துள்ளேன், ஆனால் (அவற்றில் ஒரு குதிரை என்னைத் தூக்கியெறிந்ததால் எனது உணர்வுகள் புண்படுத்தப்பட்டபோதிலும்) அவற்றில் எதுவும் என்னைப் பயமுறுத்தியதில்லை. பின்வரும் விவரிப்பு என் சிந்தைக்கு வருகிறது: ஒரு புகைவண்டி நெருங்கி வந்து கொண்டிருக்கும்போது, தண்டவாளத்தின்மீது நிற்குதலில் உள்ள அபாயத்தைப் பற்றி நம்மில் பலர் அறிந்துள்ளோம்.

ஒருவேளை, என்ன நடந்தாலும் சரி, தண்டவாளத்தின்மீதே நிற்பது என்று நாம் உறுதிகொண்டுள்ளோம் என்று கற்பனை செய்வோம். இப்போது, தண்டவாளத்தின்மீது நாம் இவ்வாறு நின்றுகொண்டிருக்கையில், கனத்த ஒரு புகைவண்டி நம்மைக் கீழே சாய்த்து, சக்கரங்கள் நம்மீது சுழன்று, விசில் சத்தம் கீச்சிட்டால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். இந்த உணர்வு, பழங்கால உலகில் வாழ்ந்தவர்கள் தங்களை நோக்கிக் குதிரைகள் பாய்ந்தோடி வர, தாங்கள் ஒளிய இடமற்ற நிலையில் இருக்கும்போது அவர்கள் கொண்டிருந்த உணர்வுக்குச் சமமானதாக உள்ளது.

இயேசுவைப் பின்பற்றுபவராக இருத்தல் என்பது சுலபமானது அல்ல என்பதற்கு, நான்கு குதிரை வீரர்கள் பற்றிய தரிசனம் கூடுதல் நிரூபணமாக உள்ளது!

**இடர்ப்படுகின்றவர்களைப் பிதாவானவர் ஆதரிப்பார்**

தேவன், இடர்ப்படுகின்ற தமது பிள்ளைகளை எப்போதும் ஆதரிப்பார் என்பதே நான்கு முத்திரைகளில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும்படிக்குத் தேவன் விரும்புகின்ற முக்கியமான சத்தியமாக உள்ளது என்று நான் நினைக்கின்றேன். நம்மில் பெரும்பான்மையானவர்கள், இந்த உலகமானது பிரச்சனைகளினால் நிறைந்துள்ளது என்றும் அவற்றில் சில பிரச்சனைகள் நமது சொந்தவாழ்விற்குள் சிந்தப்படக் கூடியவைகளாய் உள்ளன என்றும் நம்மில் பலர் ஏற்கனவே அறிந்திருக்கின்றோம். பிரச்சனைகள் வரும்போது, தேவன் நம்மைக் கைவிடுவதில்லை என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளுதல் அவசியமானதாக உள்ளது.

தேவன் நமக்குத் தேவை என்பதை நமது மனதில் பதியச் செய்தல் - அது நாம் அவரிடத்தில் திரும்புவதற்குக் காரணமாகுதல் - என்பது, நான்கு குதிரைவீரர்களைத் தேவன் அனுமதிப்பதற்கு ஒரு காரணமாக உள்ளது. இந்த நான்கு குதிரைவீரர்களைச் சாத்தான், இதற்கு நேர் எதிரான காரணத்திற்குப் பயன்படுத்துகின்றான்: மக்களைக் கர்த்தரிடத்தில் இருந்து புறம்பே திருப்புதல். தேவன் இல்லை என்று “நிரூபிக்க” செய்யப்படும் பிரபலமான விவாதத்தில் சாத்தானுடைய வெற்றிக்கு உதாரணம் ஒன்று காணப்பட முடியும்: பொய்யான மதி நுட்பம் வாய்ந்தவர், “தேவன் இருக்கின்றார் என்றால், உலகத்தில் ஏன் இவ்வளவு இடர்ப்பாடு இருக்கிறது?” என்று கேட்கின்றார்.[22]

இருப்பினும் மக்கள் கூட்டத்தைப் பொறுத்தமட்டில், சாத்தான் இந்தக் குதிரை வீரர்களை, அதிகம் அறிய இயலாத அணுகுமுறையொன்றில் பயன்படுத்துகின்றான்: நான்கு வீரர்களால் விளைவிக்கப்படுகிறவைகளான பெருங்கலக்கத்தை, மக்கள் பூமியென்னும் இந்தக் கோளின்மீதுள்ள பிரச்சனைகளில் கவனத்தைக் குவிக்கக் காரணமாகும்படி பயன்படுத்து கின்றான். இந்த வியூகத்தைப் பற்றி, எல்ட்ரெட் எகோல்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> நாம் இயல்பான ஜீவிகளாக இருக்கின்றோம் என்பதை அறிந்துள்ள சாத்தான், நம்மை ஆவிக்குரிய பாதுகாப்பில் இருந்து வெளியே

> *இழுத்து விடுவதற்கு, உலகப்பிரகாரமான வழிகள் ஒவ்வொன்றையும் பயன்படுத்துகின்றான். அவன் நம்மை சரீரப்பிரகாரமாகத் தாக்கு கின்றான், நாம் பட்டினி, வியாதி, பஞ்சம், சுற்றுச்சூழல், இன்ன பிறவற்றின்மீது கவனம் செலுத்தக் காரணமாகின்றான். அவன், ஆவிக்குரிய யுத்தத்தின் [அதாவது, அவனுடன் நாம் தொடுக்கும் யுத்தத்தின்] முக்கியத்துவத்தில் இருந்தும்கூட, நமது கவனத்தைத் திருப்புகின்றான்.*[23]

*சாத்தான், விசுவாசிகளுக்கு எதிரான தனது யுத்தத்தில், இந்த வியூகத்தை இன்னும் ஒருபடி மேலாக கொண்டு செல்கின்றான். இந்தக் குதிரை வீரர்கள் நமது சொந்த வாழ்வுடன் ஒரு மோதலைக் கொண்டுள்ளதாக நாம் கண்டறியும்போது, பிசாசானவன் "இந்தக் கொடிய மிருகங்கள் மற்றும் இவற்றின்மீது ஏறியுள்ள இரக்கமற்ற வீரர்கள்மீது உன் கவனத்தைத் திருப்பு. அவர்களின் ஒடுக்குமுறையானது உன் சிந்தையிலும் இருதயத்திலும் பாய்ந்தோடுவதற்கு அனுமதி. அவர்கள் கவலையிலும் பெருவருத்தத்திலும் மிதித்துத்தள்ள அனுமதி!" என்று இரகசியமாய்க் கூறுகின்றான். பீட்டர்ஸன் பின்வருமாறு எழுதினார்,*

> *தீமையை நாம் எந்த வடிவத்தில் அனுபவிக்கும் போதும், அது முழுமையாக உணரப்படுகிறது. அது மற்ற ஒவ்வொன்றையும் துடைத்துப் போடுகிறது. பல்வலி என்பது உடலின் பிறபாகங்களின் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை நீக்கிப்போடுகிறது. புண் கொண்ட ஒரு கால்விரல், எனது கால்மூட்டு முயற்சியின்றி அசைகிறது என்ற அற்புதம் நிறைந்த உண்மையை மதித்தலைச் சாத்தியம் அற்றதாக்குகிறது.*[24]

*பீட்டர்ஸனின் வரிகளை நான் வாசிக்கும்போது, தீவிரமாய் எனக்குவந்த முதல் பல்வலியையும், எனது தாடையில் ஏற்பட்ட குத்தல் எடுக்கும் வலி மாத்திரம் விட்டுவிடப்பட்டிருந்த நிலையில், உலகம் முழுவதும் நினைவில் இருந்து ஒய்ந்து போயிருந்த, உறக்கமற்ற இரவையும் நான் நினைவுகூருகின்றேன். நாம் கவனமாக இராவிட்டால், நமது வழியில் தீவிரமான இடர்ப்பாடு வருகிறபோது, மற்ற ஒவ்வொன்றைப் பற்றிய கண்ணோக்கையும் நாம் இழந்து போய்விடும் அளவுக்கு, அவற்றில் நாம் அதிகமாய் உள்ளிழுக்கப்பட்டுவிடுவோம்: நாம் வாழ்வின் நன்மை பற்றிய, தேவைகள் கொண்டுள்ள மற்ற மக்கள், மற்றும் நம்மீது அன்புகூருகின்ற தேவனைப் பற்றியும் கூட, நாம் கொண்டுள்ள கண்ணோட்டத்தை இழக்கக்கூடும்.*

*Life என்ற பத்திரிகையின் 1993, அக்டோபர் மாத இதழில், புல்லாங் குழல் வாசிக்கும் ஜென்ஸன் என்று பெயர்கொண்ட ஒரு பையனின் புகைப்படம் ஒன்று வெளியாயிற்று. அவனது நீண்ட கருத்த கூந்தலின் கீழே கண்கள் இருந்திருக்க வேண்டிய இடத்தில் நீண்ட இருண்ட குழிகள் வெறுமையான குழிகளாய் இருந்தன. காரணம் எதுவாயிருப்பினும் பார்வையற்ற தன்மை என்பது பரிதபிக்கத் தக்கதாக உளளது; ஆனால் கொலம்பியா நாட்டின் பொகொட்டாவைச் சேர்ந்த இந்த ஜென்ஸன்,*

பெரும்பான்மையானவர்களுடையதைக் காட்டிலும் அதிக கவலைதரும் அனுபவத்தைக் கொண்டிருந்தான். அவன் பிறந்து பத்து மாதங்கள் ஆனபோது, அவனது தாயார் அவனுக்கு ஏற்பட்ட தீவிரமான வயிற்றுப்போக்கினிமித்தம் அவனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றாள். அடுத்த நாளில் அவள் திரும்பி வந்தபோது, அவனது கண்களில் துணிகள் சுற்றி கட்டப்பட்டிருந்தது, அவனது உடலானது ஏற்கனவே, உலர்ந்த இரத்தத்தினால் சளசளத்துக் கிடந்தது. அவள் உடனே அவனை இன்னொரு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றாள், அங்கு அவளிடத்தில், அவனுடைய கண்களை யாரோ திருடிச் சென்றுவிட்டனர் என்று கூறப்பட்டது. எவ்வளவு துன்பகரமானது! கொலம்பியாவில் உள்ள உடலுறுப்புத் திருடர்களின் விஷயத்தைக் காட்டிலும் அதிக துன்பகரமான விஷயம் ஒன்றை உங்களுக்குக் கூறுவதற்கு என்னை அனுமதியுங்கள்: ஆவிக்குரிய பார்வையை, உண்மையில் மிகமுக்கியமாக உள்ள காணும் மற்றும் பகுத்தறியும் திறமையை, நமது வாழ்வில் ஊடுருவுகிற இடர்ப்பாடுகளில் தேவனுடைய கரத்தைக் காணும் திறமையைத் திருடுகின்ற ஒருவன் இருக்கின்றான். அவன் சாத்தான் என்பவனாயிருக் கின்றான்![25] "அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" (2 கொரிந்தியர் 2:11ஆ) என்பதால் தேவனுக்கு நன்றி. உங்கள் ஆவிக்குரிய பகுத்துணர்வைக் களவாடுவதற்கு, சாத்தான் ''பிரபஞ்சத்திற்குரிய கவலைகளை'' (லூக்கா 8:14) பயன்படுத்துவதை அனுமதிக்காதீர்கள்!

முந்திய பாடத்தில் நான், 6:1-8ல் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளைச் சுட்டிக்காண்பித்திருந்தேன், அவைகள் தேவன் கட்டுப்பாடு செலுத்து கின்றார் என்றும் அவர் தமது திட்டங்களையும் நோக்கங்களையும் செயல் படுத்திக் கொண்டிருக்கின்றூர் என்பதையும் வலியுறுத்துகின்றன. நமது பாடம் தொடருகையில், அவரது திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றின் இருதயம் போன்ற மையப்பகுதியில், அவரது மக்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்ற விருப்பம் உள்ளது என்பதைக் காண்போம். தேவன் நம்மீது அன்புகூருகின்றார்; அவர் நமது பக்கம் இருக்கின்றார். நீண்ட காலத்திற்கு முன்பு, அவர் மோசேயிடத்தில், "எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, அவர்களை விடுவிக்கும்படி இறங்கினேன்" என்று கூறினார் (நடபடிகள் 7:34அ). இதே உணர்வைத் தேவன் முதல் நூற்றாண்டிலும் கொண்டிருந்தார், அவர் இன்றைய நாட்களில் இன்னமும் அதைக் கொண்டிருக்கின்றார்!

## முடிவுரை

வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிக்கும் கிறிஸ்தவருக்கு, பிரச்சனைகளைப் பொறுத்தமட்டில், "வியப்பெதுவும் இருப்பதில்லை." இடர்ப்பாடு தவிர்க்க இயலாததாக உள்ளது என்று முதல் நான்கு முத்திரைகளும் நமக்கு நினைவூட்டுகின்றன. பேராசை, யுத்தம், பொருளா தார சிரமங்கள், மற்றும் மரணம் என்பவை வாழ்வுக் காட்சியின் பாகமாக

*உள்ளன, இவைகள் பாவத்தினால் கறைபடிந்த உலகத்தின் இருளான பக்கமாக உள்ளன. இது, கிறிஸ்தவர்கள் பெருவருத்தம் அடைய வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை. "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31).*[26]

*இரண்டாம் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த இருளான நாட்களின் போது, ஹாரோ ஸ்கூல் என்ற பள்ளியின்*[27] *பட்டமேற்புக் குழுவினருக்கு வின்ஸ்ட்டன் சர்ச்சில் உரைநிகழ்த்தினார். அவரது உரையில் இருந்த பின்வரும் வார்த்தைகள் இன்றும் வாழ்கின்றன: "ஒருக்காலும் தளர்ந்து போய்விடாதீர்கள், ஒருக்காலும் தளர்ந்து போய்விடாதீர்கள், ஒருக்காலும், ஒருக்காலும், ஒருக்காலும், ஒருக்காலும் - ஏதொன்றிலும், பெரியதோ அல்லது சிறியதோ, அதிகமோ அல்லது அற்பமோ - ஏதொன்றிலும் ஒருக்காலும் தளர்ந்து போய்விடாதீர்கள் ..." என்று கூறினார்.*[28] *சாத்தானுடனான நமது யுத்தத்தில் வேதாகமும், "ஒருக்காலும் தளர்ந்து போய் விடாதீர்கள்'' என்று கூறுகிறது: ''பலங்கொண்டு திடமனதாயிரு. திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" (யோசுவா 1:9). அந்த வசனப்பகுதியின் சத்தியமானது பின்தொடரும் பாடங்களில் திரும்பத் திரும்ப எதிரொலிக்கும். உங்கள் வாழ்வை அதனுடன் நங்கூரமிடுங்கள்.*

---

*குறிப்புகள்*

[1]*மகிழ்ச்சியான மற்றும் மகிழ்ச்சியற்ற வியப்புக்களுக்கான இந்த உதாரணங்கள், நீங்கள் வாழும் பகுதிக்குப் பொருத்தமற்றவையாக இருந்தால், இவ்விடத்தில் உங்கள் சொந்த உதாரணங்களைப் பதிலிட்டு நிரப்பிக்கொள்ளவும்.* [2]*உபத்திரவம் பற்றி இயேசுவின் போதனைக்கான மற்ற உதாரணங்களுக்கு, மத்தேயு 5:10-12, 44; 10:23; 13:21; 23:34; லூக்கா 11:49; 21:12; யோவான் 15:20 ஆகிய வசனங்களைக் காணவும்.* [3]John Wick Bowman, *The First Christian Drama: The Book of Revelation* (Philadelphia: Westminster Press, 1955), 49. [4]Eugene H. Peterson, *Reversed Thunder* (San Francisco: Harper Collins Publishers, 1988), 76. [5]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 59. [6]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 142. [7]*முதல் குதிரையின்மீது ஏறியிருந்தவர் இயேசு என்று நீங்கள் முடிவு செய்தால், பின்வரும் துணைக்கருத்தை நீங்கள் தழுவ வேண்டியிருக்கும்: ''சுவிசேஷம் தொடர்ந்து முன்செல்வதற்காகத் தேவனுக்கு நன்றி,'' மற்றும் பிற.* [8]*இன்றைய நாட்களில் நான்கு குதிரை வீரர்களைப் பற்றி விவரிப்பதில் நான், எனக்கு அர்த்தம் நிறைந்தவையாகவும் எனது உரையைக் கேட்பவர்களுக்கு அர்த்தம் நிறைந்தவை என்று நான் நம்புகின்றவையாகவும் உள்ள சொல் விளக்கங்களையும் விவரிப்புகளையும் பயன்படுத்துவேன். உங்களுக்கும் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கும் அதிக அர்த்தம் நிறைந்தவைகளாக உள்ள சொல்விளக்கங்களையும் விவரிப்புகளையும் தேவைக்கேற்றபடி இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்துங்கள்.* [9]Calvin Miller, *A Requiem for Love*, quoted in Craig Brian Larson, ed., *Illustrations for Preaching and Teaching From* Leadership Journal (Grand Rapids, Mich.: Baker Books, 1993), 93. [10]Quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed.,

gen. ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 636.

[11]Quoted in Leonard Louis Levinson, *Webster's Unafraid Dictionary* (New York: Collier Books, 1967), 254. ஷெர்மன் என்பவர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் உள்நாட்டு யுத்தத்தில் ஒரு யூனியன் ஜெனரல் என்ற அதிகாரியாக இருந்தவர். [12]எனது நண்பர் ஜோயல் டேவிஸ் அவர்கள், "உற்பத்தி என்பதல்ல, ஆனால் விநியோகம் என்பதே பிரச்சனையாக உள்ளது" என்று கவனித்துள்ளார். அவர் சரியாகவே கூறினார். தொழில் நுட்பம் மிகவும் தேவைப்படுகிற நாடுகளுக்கு அதை எடுத்துச் செல்லுதல் என்பது இதைப் போன்ற பிரச்சனையாக உள்ளது.[13]இந்தப் பாடத்தில் தரப்படுகிற புள்ளிவிபரங்கள், பல்வேறு வகையான கலைக்களஞ்சியங்கள் மற்றும் பிற ஆதாரமூலங்களில் இருந்து எடுக்கப்பட்டவையாகும். [14]இந்த மனிதர், ஒரு காவல் துறை அதிகாரியைக் குறிக்கும் வகையில் நீலநிற விளக்கை மேற்பகுதியில் கொண்டிருந்த வாகனம் ஒன்றைக் கொண்டிருந்தார். இவர் பெண் கார் ஓட்டுனர்களை நிறுத்தி, அவர்களைக் கற்பழித்தார். [15]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 177. [16]முந்திய பாடத்தில் தரப்பட்டிருந்த பதில்கள், இந்தப் பாடத்தில் தரப்படும் பதில்களின் மேல்கவிதல் என்பது அவசியமானதாக உள்ளது. [17]Tommy South, "The Four Messages of the Seven Seals," *Truth for Today* (November 1988): 9. [18]Metzger, 58. [19]பொதுவாக, உடல் நல நன்கொடைகள் என்பவை இந்த போதகர்களின் சீஷர்களாக இருப்பதற்கு அத்தியாவசியமானவைகளாக உள்ளன. [20]அவர்கள் வேதாகமத்தை வாசித்திருப்பது இல்லையா? அவர்கள் யோபுவின் வரலாற்றையோ அல்லது உணவுத் துணுக்குகளுக்காகப் போராடிக்கொண்டிருந்த உண்மையுள்ள லாசருவின் வரலாற்றையோ அல்லது உண்மையாயிருந்து துன்புற்றவர்களின் நூற்றுக்கணக்கான மற்ற உதாரணங்களையோ வாசித்தது இல்லையா?

[21]Eldred Echols, *Haven't You Heard? There's a WAR Going On!: Unlocking the Code to Revelation* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 82. [22]இந்த விவாதம் பிரபலமானதாக இருந்தாலும், இது கேள்விக்குப் பதில் அளிப்பதாயிருப்பதில்லை. இது உண்மையில் தேவனுடைய இருப்பைப் பற்றியதாக இராமல், தேவனுடைய இயல்பைப் பற்றியதாகவே உள்ளது. இந்த "விவாதத்திற்கு" பதில் அளித்தல் என்பது எனது நோக்கம் அல்ல. இந்த மற்றும் இதைப் போன்ற "விவாதங்களுக்கு," கிறிஸ்தவத்திற்கான சான்றுகள் பற்றிய தரமான புத்தகங்கள் பதில் அளிக்கின்றன. சாத்தான் தன்னுடைய நோக்கத்திற்காக நான்கு குதிரை வீரர்களை எவ்வாறு உபயோகிக்கிறான் என்பதை சித்தரிக்க மாத்திரமே நான் விரும்பினேன். [23]Echols, 72. [24]Peterson, 73. [25]Craig Brian Larson, ed., *Contemporary Illustrations for Preachers, Teachers, and Writers* (Grand Rapids, Mich.: Baker Books, 1996), 240. [26]Eugene H. Peterson, *The Message: New Testament With Psalms and Proverbs* (Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995), 379. [27]ஹாரோ ஹவுஸ் என்பது இங்கிலாந்தின் மிடில்செக்ஸ் என்ற மாகாணத்தின் ஹாரோ என்ற இடத்தில் உள்ள ஒரு தனியார் ஆண்கள் பள்ளியாகும். [28]Quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed., gen. ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 621.

---

## மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. மகிழ்ச்சி மற்றும் மகிழ்ச்சியற்ற வியப்புக்களுக்கு மற்ற உதாரணங்

*களை உங்களால் தர முடியுமா? மகிழ்ச்சியற்ற வியப்பை நீங்கள் விரும்புகின்றீர்களா?*

2. *நான்கு குதிரை வீரர்களும் இன்றைய நாட்களிலும் சவாரி செய்து கொண்டிருக்கின்றனர் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகின் றீர்களா?*
3. *வெள்ளைக் குதிரையின்மீது ஏறியிருந்தவர் செய்துள்ளவற்றிற்குப் பிற உதாரணங்களை நீங்கள் தர இயலுமா? அவர் உங்கள் வாழ்வில் அல்லது உங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்களின் வாழ்வில் எப்போதாவது சவாரி செய்துள்ளாரா? சிவப்புக் குதிரை, கறுப்புக் குதிரை மற்றும் மங்கின நிறமுள்ள குதிரை ஆகியவைகளின்மீது சவாரிசெய்த நபரின் விஷயம் என்ன?*
4. *தேவன் சோதனைகளுக்குக் காரணராகுதல் மற்றும் சோதனைகளை அனுமதித்தல் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு என்ன?*
5. *"இந்த உலகத்தைப் பொறுத்தமட்டில், எதிர்காலம் எப்போதுமே துன்பம் நிறைந்ததாகவே இருக்கும்" என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகின்றீர்களா?*
6. *"நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தாலும், அப்போதும் நாம் சோதனைகளை எதிர்கொள்வோம்" என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகின்றீர்களா?*
7. *இந்தப் பாடத்தின் எழுத்தாளர், இடர்ப்பாடுகளின் "இருமடங்கை" கிறிஸ்தவர்கள் பெறுவார்கள் என்று கூறுகின்றபோது, அவர் அர்த்தப்படுத்துவது என்ன? அதை நீங்கள் ஒத்துக்கொள்கின்றீர்களா?*
8. *பல ஆண்டுகளுக்கு முன்பு பாய்ந்தோடுதல் ஒன்றின் காரணமாக எழுந்த பயங்கரத்தை விவரிப்பதற்கு இந்த எழுத்தாளர், புகை வண்டியொன்றின் விவரிப்பைப் பயன்படுத்துகின்றார். நீங்கள் எந்த விவரிப்பைப் பயன்படுத்துவீர்கள்?*
9. *தேவன், "இடர்ப்பாட்டிற்குள்ளாகும் தமது பிள்ளைகளை எப்போதும் ஆதரிப்பார்" என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா?*
10. *நமது விசுவாசத்தை அழிப்பதற்குச் சாத்தான், உலகப்பிரகாரமான பிரச்சனைகளை எவ்வாறு பயன்படுத்துகின்றான்? அவன் பொதுவாக உலகத்தில் செயல்விளைவுடன் இருக்கின்றான் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? மிகமுக்கியமாக, அவன் உங்கள் சொந்த சிந்தனையில் செயல்விளைவு எதையும் கொண்டுள்ளானா?*
11. *தேவன் நம் பக்கமாக இருக்கின்றார் என்று உண்மையிலேயே நாம் நம்புகின்றோமா? அதை நாம் உண்மையிலேயே நம்பினால், அது நம் வாழ்வில் என்ன விதமான செயல்விளைவைக் கொண்டிருக்கும்?*



*நான்கு குதிரை வீரர்கள் (6:1-8)*